**O.S.No. 93/2018**

**DW 2:** சந்திரன் தேதி 07.04.2026

பிவாசா 2 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

பிவாசாஆ 13 ல் உயில் சாசனத்தில் உள்ள சொத்துகளை 2 மற்றும் 3 வாதிகளான சம்பூர்ணம் , விஜயலட்சுமியின் தந்தை ஒரு முத்துகவுண்டர் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கிய சொத்துகள் என்றால் சரிதான். முத்துகவுண்டருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்தின் ஒரு பகுதியை என் அப்பாவிற்கு கிரையம் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். என் தந்தை பழனியப்பனை யார் பராமரித்து வந்தோம் என்றால் நானும் என் சகோதரரும் பராமரித்து வந்தோம். எனக்கும் என் சகோதரர் மற்றும் என் தந்தைக்குமிடையே எந்த பிரச்சனையும் இல்லை. என் தந்தை இறக்கும் வரை நான் தான் என் தந்தையை பராமரித்து வந்தேன். அவருடைய மருத்துவ செலவை நான் தான் செய்தேன். முத்துகவுண்டரிமிருந்து கிரையம் பெற்ற பூர்வீக சொத்தை மீண்டும் அவரது குடும்பத்திற்கே கொடுக்க வேண்டும் என்பதற்காக தான் உயில் சாசனம் பிவாசாஆ 13 எழுதப்பட்டது என்றால் சரிதான். பிவாசாஆ 13 ல் உள்ள நோக்கத்திற்காக பிவாசாஆ 13 எழுதப்பட்டதல்ல என்றால் சரியல்ல. சுந்தரமூர்த்தி என் தந்தையை அவ்வப்போது வந்து பார்த்து செல்வார். பிவாசாஆ 13 சட்டப்படியானது அல்ல என்றால் சரியல்ல. பிவாசாஆ 13 நடைமுறைபடுத்தப்படவில்லை என்றும் அதன் படி சுந்தரமூர்த்திக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.